# நியூஸ் 7 தொலைக்காட்சி சார்பில் நடைபெறும் துளிரும் விஞ்ஞானிகள் – அறிவியல் திருவிழாவில் மாண்புமிகு துணைநிலை ஆளுநரின் உரை.

இடம் – பெத்தி செமினார் மேநிலைப் பள்ளி. தேதி – 27-06-2025

மரியாதைக்கு உரிய சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம், பெத்தி செமினார் மேநிலைப் பள்ளியின் முதல்வர் REV. FATHER DEVADOSS, நியூஸ் 7 தொலைக்காட்சியின் நிர்வாகிகள், ஆசிரியர்கள், இளம் விஞ்ஞானிகளாக, இந்த இந்திய தேசத்தை தலை நிமிர வைக்கும் என் அன்புக்கு உரிய மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் வணக்கம்.

“துளிரும் விஞ்ஞானி – பூமியை பாதுகாப்போம்” என்ற தலைப்பில் பள்ளிகள் பங்கேற்கும் இந்த அறிவியல் திருவிழாவை தொடக்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால், பூமியை பாதுகாக்கும் எண்ணத்தோடு இளம் தலைமுறை - மாணவ மாணவிகள் இங்கே வந்து இருக்கிறார்கள் என்பது எனக்கு மிகப் பெரிய நம்பிக்கையை தருகிறது.

அது மட்டும் அல்ல. ஜனநாயகத்தின் நான்காவது தூணாக இருக்கின்ற MEDIA-வும் சமுதாய மாற்றத்தின் விதைகளாக இருக்கின்ற மாணவர்களும் ஒன்று சேர்ந்து இருக்கின்ற நிகழ்ச்சி. இது மிகப்பெரிய மாற்றத்திற்கான தொடக்கம் என்று நம்புகிறேன்.

இப்படி ஒரு நிகழ்ச்சியில் கவனம் செலுத்தி இதை நடத்துவதற்காக NEWS 7 TV CHANNEL-க்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாய பொறுப்பு உணர்வோடு இதை செய்து இருக்கிறீர்கள் அதற்காக என்னுடைய பாராட்டுகள். இன்று, கல்வி 7 என்ற YOUTUBE CHANNEL தொடங்க இருக்கிறீர்கள். அதன் மூலமாகவும் இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். கருத்துகளை மாணவர்கள், இளைஞர்கள் இடத்தில் கொண்டு சேர்க்க வேண்டும். உங்களுடைய முயற்சி இந்த திசையில் இன்னும் தொடர வேண்டும்.

இந்த நிகழ்ச்சியின் THEME-ஆக REDUCE, RECYCLE, REUSE என்பது வைக்கப்பட்டு இருக்கிறது. இது உலகளாவிய சிந்தனை மட்டும் அல்ல, நம் எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று.

மாணவ செல்வங்களே! நாம் வாழும் பூமி நமக்கு தங்க இடம், நீர், காற்று அனைத்தையும் தருகிறது. இதை பாதுகாக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆனால், மனிதர்கள் செய்த தவறுகளால் இந்த பூமித் தாயின் உடலையும் ஆன்மாவையும் நாம் காயப்படுத்தி விட்டோம். அதனால், CLIMATE CHANGE, புயல், வெள்ளம், காட்டுத்தீ போன்ற இயற்கை சீற்றம் - NATURAL RESOURCE, BIO-DIVERSITY DEGRADATION என்று சொல்லும் உயிர் இனங்களின் அழிவு போன்ற சவால்களை நாம் சந்தித்து வருகிறோம்.

இன்று நாம் பேசும் REDUCE, REUSE, RECYCLE என்ற மூன்றும் சாதாரண சொல் அல்ல. அது மிகப் பெரிய புரட்சி. இந்த பூமியை மீட்டு எடுக்கும் சிந்தனை. மாற்றத்திற்கான விதை.

நாமும் நம்முடைய எதிர்கால தலைமுறைகளும் ஆரோக்கியமாக வாழ்வதற்கான ஒரு மூலமந்திரம். இந்த புரட்சியில் பங்கெடுப்பது மிகவும் சுலபம். PLASTIC பொருள்கள் பயன்பாட்டை குறைக்கலாம். PUBLIC TRANSPORT பயன்படுத்தலாம். மரம் நடலாம்.

தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தலாம். நம்மை சுற்றி இருக்கின்ற இடத்தை சுத்தமாக வைத்துக் கொள்ளலாம். இப்படி நம்முடைய சின்ன சின்ன செயல்கள் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். மாணவர்களே நீங்கள்தான் மாற்றத்தின் முன்னோடி. மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி "YUVA SHAKTHI" என்ற சொல்லுவார். நீங்கள் தான் இந்த நாட்டை, உலகத்தை வழிநடத்தக் கூடிய, பாதுகாக்கக் கூடிய திறமையும் தகுதியும் கொண்டவர்கள்.

உங்களுடைய அறிவியல் கண்டுபிடிப்பு, மற்ற முயற்சிகள் எல்லாம் அதை நோக்கி இருக்க வேண்டும். இந்த பூமியை பாதுகாக்க நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் மனித குலத்தை பாதுகாக்கும் முயற்சி என்பதை நீங்கள் மறந்து விடக் கூடாது.

உங்களுடைய கண்டு பிடிப்புகள், மாதிரிகள் முடிந்தவரை இயற்கை சார்ந்ததாக, சூரிய சக்தியை பயன்படுத்துவதாக இருக்கட்டும். இங்கே இந்த அறிவியல் திருவிழாவில் பங்கேற்கும் மாணவர்கள் நாளைய பசுமை விஞ்ஞானியாக, பசுமை தொழில் நுட்ப மேதையாக, ENVIRONMENT-ஐ பாதுகாப்பவராக உருவாக வேண்டும் என்பது என்னுடைய விருப்பம்.

அதை நீங்கள் நிறைவேற்றுவீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் மாறுவது மட்டும் அல்ல. உங்களை சுற்றி இருப்பவர்களையும் இயற்கையின் பாதுகாவலராக மாற்ற வேண்டும். அந்த விழிப்புணர்வை அவர்களுக்கு நீங்கள் ஏற்படுத்த வேண்டும்.

அரசு, பொதுமக்கள் செய்யும் முயற்சியை விட பள்ளிகள், பள்ளி மாணவர்களின் ஈடுபாடு அதிக தாக்கத்தை ஏற்படுத்தும். ஏனென்றால் பள்ளிகள் தான் மாற்றத்தின் பிறப்பிடம். பிளாஸ்டிக் எதிர்ப்பு, பசுமை குழு, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு போன்ற முயற்சியில் பள்ளிகள் ஈடுபடுவதை நான் பார்க்கிறேன். மாணவர்களின் இயற்கை சார்ந்த அறிவியல் சிந்தனைக்கு வழிகாட்டும் ஆசிரியர்களை நான் மனதார பாராட்டுகிறேன். ஏனென்றால் உங்களுடை முயற்சி எதிரகால சமுதாயத்தை வழி நடத்துகிறது. மாணவர்கள் மீதும், இந்த இயற்கையின் மீதும் நீங்கள் கொண்ட ஈடுபாடுதான் ஒரு வளமான, பசுமையான உலகத்தை உருவாக்கும்.

இந்த திருவிழாவில் கலந்து கொள்ள வந்திருக்கும் உங்களுக்கு நான் வைக்கும் கோரிக்கை இதுதான். உங்கள் மனதில் உள்ள பசுமை எண்ணங்களை உங்கள் வீடு, பள்ளி, தெரு, நகரம், நாடு என்று எல்லா இடத்திலும் பரவச் செய்யுங்கள். இந்த உலகமே அழகாக, பசுமையாக, பாதுகாப்பானதாக மாறும்.

மத்திய-மாநில அரசுகள் பல பசுமை முயற்சிகளை எடுத்தாலும் அதை செயல்படுத்தும் பொறுப்பு

உங்களிடத்தில் இருக்கிறது. இந்த பூமியை பசுமை பூமியாக மாற்ற ஒரு நல்ல திட்டத்தை நம்முடைய பாரதப் பிரதமர் நரேந்திர மோடி கொண்டு வந்து இருக்கிறார். **EK PED MAA KE NAAM** – என் அம்மாவின் பெயரில் ஒரு மரம். இந்த திட்டத்தை இந்தியா மட்டும் அல்ல உலகமே வரவேற்கிறது.

அப்படி ஒரு தொலைநோக்கு திட்டம். பாரதப் பிரதமரின் அழைப்பை எற்று நாடு முழுவதும் இன்னும் சொல்லப் போனால் உலகம் முழுவதும் கோடிக் கணக்கான மரங்கள் நடப்பட்டு இருக்கிறது. நாம் ஒவ்வொரும் நம்முடைய அம்மாவின் பெயரில் ஒரு மரத்தை நட்டு பாதுகாக்க வேண்டும். (அப்பாவுக்காகவும் ஒரு மரம் நடலாம்) நம்மை பெற்று வளர்த்த தாய்-தந்தைக்கு மட்டும் அல்ல இந்த பூமி தாய்க்கும் நாம் செய்யும் நன்றிக் கடனாக இருக்கும்.

இந்த விழாவில் உங்களோடு கலந்து கொண்டதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். “பூமியை பாதுகாப்போம்” என்பதை ஒரு உறுதியாக ஏற்போம் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**நன்றி… வணக்கம்.**